DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 133/2024 |
| Deposition of Witness for | : | P.W.10 |
| Name | : | **மருத்துவர். சூர்யநாராயணன்** |
| Father's Name | : | **சண்முகசுந்தரம்** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | **38/2026** |

**(வழக்கின் எதிரிகள் 1,2 ஆஜர்.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 10.02.2026

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது திருவண்ணாமலை மாவட்டம் பொன்னூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.06.2023 ம் தேதி நான் சிவகங்கை மருத்துவக்கல்லூர் மருத்துவமனையின் அவசர சிகிச்சைப்பிரிவில் மருத்துவ அதிகாரியாக இருந்த போது அதிகாலை 01.21 மணியளவில் பணியில் இருந்தபோது 108 ஆம்புலன்ஸ் மூலம் தனியாக 25 வயது மதிக்கதக்க ஆண் கிருஷ்ணவர்மா த.பெ.செல்வம், பட்டமங்களம் என்பவர் தனக்கு ஏற்பட்ட காயத்திற்காக சிகிச்சைக்கு அழைத்து வரப்பட்டார். அவரை விசாரித்தபோது அவர் தன்னை 08.06.2023 அன்று இரவு 9.30 மணியளவில் தெரிந்த 2 ஆண் நபர்களால் மீனாட்சிபுரம் என்ற இடத்தில் அருவா என்ற ஆயுதத்தால் தாக்கியதில்

காயம்பட்டதாக தெரிவித்தார்.

2. அவரை பரிசோதித்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவரது உடம்பில் கீழ்கண்ட காயங்கள் இருந்தது. 1) இடது கை கட்டைவிரல் முழுவதுமாக வெட்டப்பட்டு தொங்கிய நிலையில் காணப்பட்டது. 2) இடது முழங்கையில் 4x2x1 cm ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. 3) வலது முன்கையில் 6x2x1 cm அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. 4) அவரது வலது பக்க தலைப்பகுதியில் 5x2x1 cm அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. நான் அவருக்கு இடது கை கட்டைவிரல் வெட்டுப்பட்டு தொங்கிய நிலையில் காணப்பட்டதால் அவருக்கு பிளாஸ்டிக் சர்ஜரி செய்வதற்காக நான் முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிக்சைக்காக மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன்.

3. அவருக்கு மேல் சிகிச்கை அளிக்கப்பட்டு அங்கிருந்து பெறப்பட்ட மருத்துவ அறிக்கையில் இடது கட்டைவிரல் அறுபட்டதோடு, வலது கட்டைவிரல் நுனி எலும்பு முறிவு ஏற்பட்டிருந்ததாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் அடிப்படையில் இடது கை கட்டைவிரலில் அறுபட்ட காயமும், வலது கட்டைவிரல் நுனி எலும்பு முறிவு ஏற்பட்டிருந்த காயமும் கொடுங்காயங்கள் என்று நான் கருத்து தெரிவித்து நான் வழங்கிய **விபத்து பதிவேட்டு நகல் அ.த.சா.ஆ.8** ஆகும். இதர காயங்கள் அனைத்தும் சாதாரண காயங்கள் ஆகும். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் அ.த.பொ.சா1 அருவாள்மனையால் காயம்பட்டவரை தாக்கும்போது அந்த மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

இந்த வழக்கில் நுண்கதிர் ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காயம்பட்டவரை யார் அழைத்து வந்தார்கள் என்றால் 108 ஆம்புலன்சில் தனியாக வந்தார் யாரும் உடன் வரவில்லை. எதிரிகளால் எந்த காயமும் ஏற்படவில்லை என்றாலும் ஆட்டுக் குட்டிகளை

இருசக்கரவாகனத்தில் ஏற்றிச்செல்லும்போது தடுமாறி கீழே விழும்போது மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றாலும் இல்லை. இருசக்கரவாகனத்தில் இரும்பு பொருட்கள் ஏற்றிச்செல்லும்போது மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் கூர்மையான பொருட்களால் காயம் ஏற்பட வாய்ப்புள்ளது ஆனால் நான்கு காயங்கள் வெவ்வேறு இடங்களில் ஏற்பட வாய்ப்பில்லை.

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.02.10 14:21:03 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை..**